**இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) - 2015**
-----------------------------------------------------------------

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, விரிவான வருமான கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் நாணய அதிகாரச்சட்டத்தின் (422 ஆம் அத்தியாயம்) 42(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுடனான இணங்கியொழுகதலை பரீட்சிப்பதற்காக பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் எனக்கு உதவியளிக்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**
-----------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**
-----------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சீபீஎஸ்எல் இன் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சீபீஎஸ்எல் இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டிற்கான அட்டுறுச் செலவினம் ரூபா 244,253,125 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் இந்த வழுவினை குறித்த செலவினக் கணக்குகளில் சீராக்குவதற்குப் பதிலாக அது மீளாய்வாண்டிற்கான சில்லறை வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2. பொதுத் திறைசேரியிடமிருந்தும் ஏனைய அமைச்சுக்களிலிருந்தும் பெறவேண்டியவை

நாணய அதிகாரச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிலுவையிலுள்ள மீதியும் இலாபத்தினை திரட்டு நிதியத்திற்கு மாற்றுவதற்கு முன்னர் அறவிடப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 1,378,694,800 ஆன தொகை திரட்டு நிதியத்திற்கு இலாபத்தினை மாற்றும் நேரத்தில் அறவிடப்படாது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு தொடர்ந்தும் நிலுவையாக காணப்பட்டது. ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையான மீதியின் பொழிப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **நிலுவையிலுள்ள மீதி**<br>**ரூபா** |
|---|---:|
| 2010 இற்கு முன்னர் | 3,131,503 |
| 2010 | 1,311,774,231 |
| 2011 | 16,851,378 |
| 2012 | 21,374,392 |
| 2013 | 2,165,825 |
| 2014 | 3,441,143 |
| 2015 | 19,956,328 |
| **மொத்தம்** | **1,378,694,800** |

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக சீபீஎஸ்எல் தனது ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக அதன் சொந்த நிதிகளிலிருந்து மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக முறையே ரூபா 322.6 மில்லியன் மற்றும் ரூபா 179.2 மில்லியன் கூட்டுத்தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி (பிஏவைஈ) மற்றும் வரி மீதான வரி என்பவற்றைச் செலுத்தியிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சீபீஎஸ்எல் இன் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் வரிக்கு முந்திய ரூபா 31,532 மில்லியன் நேரொத்த தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 17,814 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய நட்டத்தை விளைந்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் மேலும் ரூபா 13,718 மில்லியன் முன்னேற்றம் காட்டப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அந்நியச் செலாவணி நிதிச் சொத்துக்களிலிருந்தான தேறிய செலவினம் ரூபா 42,001 மில்லியனால் அதிகரித்திருந்தமைக்கு எதிராக அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு மிகை மற்றும் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம் என்பன முறையே ரூபா 42,856 மில்லியன் மற்றும் ரூபா 13,535 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்தமை நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பங்களித்த பிரதான காரணங்களாகும்.

### 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டின் ரூபா 20.2 பில்லியன் தொகையான (ரூபா 32.2 பில்லியன் தேறிய இந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நட்டம் உள்ளடங்கலாக) மொத்த தேறிய செயற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாடிற்கான சீபீஎஸ்எல் இன் மொத்த தேறிய செயற்பாட்டு நட்டம் ரூபா 10.6 பில்லியன் தேறிய அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நயம் உள்ளடங்கலாக ரூபா 6.1 பில்லியனாக காணப்பட்டமையால், மொத்த தேறிய செயற்பாட்டு நட்டத்தில் 14.1 பில்லியன் அல்லது 70 சதவீத முன்னேற்றம் காட்டப்பட்டது. அதேவேளை, முன்னைய ஆண்டின் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினம் என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாட்டுச் செலவினமான ரூபா 11.3 பில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அது ரூபா 11.6 பில்லியனாக இருந்தது. ஆதலால், செயற்பாட்டுச் செலவினத்தில் 2.65 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் இலங்கை மத்திய வங்கியின் வருமானம் மற்றும் செலவின மாற்றங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே காட்டப்படுகின்றன.

| | 2015 | 2014 | மாற்றம் {சாதகம்/(பாதகம்)} | |
|---|---|---|---|---|
| | ரூபா பில். | ரூபா பில். | ரூபா பில். | சதவீதம் |
| அந்நியச் செலாவணி நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம்/(செலவினம்) | (15.1) | 26.9 | (41.9) | (155.7) |
| அந்நியச் செலாவணி நிதிப் பொறுப்புக்கள் மீதான செலவினம் | 3.6 | 3.1 | (0.5) | (16.1) |
| அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நயம்/ (நட்டம்) | 10.6 | (32.3) | 42.9 | 132.8 |
| உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம்/ (செலவினம்) | 0.4 | (13.1) | 13.5 | 103.0 |
| செயற்பாட்டுச் செலவினம் | 11.6 | 11.3 | (0.3) | (2.7) |
| ஆண்டிற்கான தேறிய நட்டம் | (17.8) | (31.5) | 13.7 | 43.5 |

அந்நியச் செலாவணி நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 156 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும், உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 103 சதவீதத்தினால் அதிகரித்திருநச்தமையின் விளைவாக, மீளாய்வாண்டிற்கான தேறிய நட்டத்தில் குறைவொன்று காணப்பட்டது.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கட்டிடங்களை வாடகைக்கு விடுதல்

நாணயச்சட்டத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம், ‘‘சீபீஎஸ்எல் ஆனது அதன் கோரிக்கைகளில் எவற்றையேனும் திருப்திப்படுத்துவதற்கான அவ்வாறான ஆர்வம் தவிர்ந்த எந்தவொரு வியாபாரத்தில் அல்லது நேரடியாக ஆர்வம் கொண்ட வர்த்தக, கைத்தொழில் அல்லது வேறு கையேற்றலில் ஈடுபடாதிருத்தல் வேண்டும்’’. இந்த ஏற்பாட்டுக்கு முரணாக சீபீஎஸ்எல் இற்குச் சொந்தமான பின்வரும் கட்டிடங்கள் குறித்துரைத்த நோக்கங்களிற்காக பயன்படுத்திக் கொள்ளப்படாது வெளித் தரப்பினர்களிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| கட்டிடத்தின் பெயர் | வாடகைக்கு விடப்பட்ட காலம் | வெளித்தரப்பினரின் பெயர் | மாதாந்த வாடகை |
|---|---|---|---|
| பிறேசில் நாட்டிலுள்ள ஆதனம் | 2015 பெப்ரவரி 01 முதல் 2017 சனவரி 31 வரை | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | யூஎஸ்எஸ் 9,000 |
| நிவ்யோர்க் இலுள்ள ஆதனம் | 2012 யூன் 01 முதல் 2017 மே 31 வரை | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | யூஎஸ்எஸ் 68,000 |
| ‘‘வைட் எவேய்ஸ்’’ கட்டிடம் | | | |
| - கீழ் மாடி மற்றும் 1 ஆம் மாடி | 2015 நவம்பர் 01 முதல் 2018 ஒக்தோபர் 31 வரை | கடன் தகவல் நிலையம் | ரூபா 4,140,000 |
| - இரண்டாம் மாடி | 2015 நவம்பர் 01 முதல் 2018 ஒக்தோபர் 31 வரை | தெற்கு அபிவிருத்தி அமைச்சு | ரூபா 2,070,000 |
| ‘‘நெஷனல் மியூசுவல் எஸ்ஸுரன்ஸ்’’ கட்டிடத்தின் 4 மற்றும் 5 ஆம் மாடிகள் (மத்திய நிலையம்) | 2015 திசெம்பர் 01 முதல் 2016 நவம்பர் வரை | வரையறுக்கப்பட்ட சீஎச்சீ போர்ட் சிடி கொழும்பு (தனியார்) கம்பனி | ரூபா 5,154,087 (2016 திசெம்பர் 01 முதல் ரூபா 5,540,658) |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிறேசில் நாட்டிலுள்ள ஆதனத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அமைச்சரவையின் அங்கீகாரம் இது வரை சீபீஎஸ்எல் இனால் பெறப்பட்டிருக்காததுடன் ஆதனத்தைப் பயன்படுத்துவதற்கான எதிர்காலத் திட்டம் மீளாய்வாண்டின் இது வரை தீர்மானிக்கப்பட்டிருக்கவுமில்லை.

(ii) பிறேசில் மற்றும் நிவ்யோர்க் இலுள்ள ஆதனங்களின் உரிமையினை பொதுத் திறைசேரிக்கு கைமாற்றுவதற்கு 2016 மே 10 ஆநி திகதி சீபீஎஸ்எல் இன் நாணயச் சபை தீர்மானித்திருந்த போதிலும், இது தொடர்பில் 2016 செப்தெம்பர் மாதம் வரை மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதியுரைச் சேவைகள் மற்றும் ஆலோசனை மன்றத்திற்கான கொடுப்பனவுகள்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசித்து காணாமல் போனோர் தொடர்பில் கிடைத்திருந்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான சனாதிபதி ஆணைக்குழுவிற்கு உதவுவதற்காக ஆலோசனை மன்றம் என்ற வகையில் மூன்று சர்வதேச நிபுணர்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் சனாதிபதி 2014 யூன் 28 ஆந் திகதி நியமித்திருந்ததுடன் இது 2014 யூலை 15 ஆந் திகதி 1871/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஆலோசனை மன்றத்தினதும் அவர்களது பதவியணியினதும் மீளாய்ண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான முறையே ரூபா 145 மில்லியன் மற்றும் ரூபா 111.5 மில்லியன் தொகையான மதியுரைக் கட்டணங்கள், வதிவிட மற்றும் ஏனைய கட்டணங்கள் போன்ற செலவினங்கள் சீபீஎஸ்எல் இனால் செய்யப்பட்டிருந்தன. மேற்படி செலவினங்கள் எவ்வித மீள்நிரப்புதலுமின்றி சீபீஎஸ்எல் இனால் செய்யப்பட்டிருந்த போதிலும், மேற்குறித்த மதியுரைஞர்களின் கடமைகள் சீபீஎஸ்எல் இன் குறிக்கோள்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருக்கவில்லை.

“2016 ஆகஸ்ட் 16 முதல் சீபீஎஸ்எல் இனால் மதியுரைஞர்களிற்குச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை திரட்டு நிதியத்திற்கு மாற்றப்படுவதற்குள்ள இலாபங்களிலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு 2016 நவம்பர் 01 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது” என இது தொடர்பில் சீபீஎஸ்எல் இன் உதவி ஆளுனர் எனக்கு அறிவித்திருந்தார்.

(இ) வெளிநாட்டு சட்டத்தரணிகள் மற்றும் முதலீட்டு முரண்பாடுகளை தீர்ப்பதற்கான சர்வதேச நிலையம் (ஐசீஎஸ்ஐடீ) ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகள்

எண்ணெய் இடர் குறைப்பு கொடுக்கல் வாங்கல்கள் பொருண்மையான தாக்கத்தினையும் குறிப்பிடத்தக்களவு மோசமான நிலைமையினையும் ஏற்படுத்தியிருந்தமை கண்டறியப்பட்டமையால் 2008 திசெம்பெர் 16 ஆந் திகதி நாணயச் சபையினால் வழங்கப்பட்டிருந்த நெறிப்படுத்தல்களின் கீழ் டச் வங்கி ஏஜீ (டீபீ) உடன் கைச்சாத்திடப்பட்டிருந்த எண்ணெய் இடர் குறைப்பு உடன்படிக்கைகளின் மீது கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சீபிசீ) விலகிக்கொண்டிருந்தது. அதேவேளை, டீபீ ஆனது இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஐசீஎஸ்ஐடீ இல் வழக்கினை தொடர்ந்திருந்தது. இது தொடர்பில் யூஎஸ்எஸ் 78,469,623 இனைச் செலுத்துமாறு 2012 நவம்பர் 02 ஆந் திகதி டீபீ இற்குச் சாதகமாக வழக்குத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், சட்டமா அதிபர் மற்றும் சீபீஎஸ்எல் இன் சட்ட அணியின் நெறிப்படுத்தலின் பிரகாரம் வழக்குத் தீர்ப்புக்கு எதிராக சீபீஎஸ்எல் இனால் ஐசீஎஸ்ஐடீ இல் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கமைய, 2010 ஆம் ஆண்டிலிருந்தும் 2014 ஆம் ஆண்டிற்காகவும் வழக்குகளில் பங்குபற்றியிருந்த வெளிநாட்டு சட்டத்தரணிகளிற்கும் முறைப்பாட்டினை விசாரிப்பதற்கான நிர்வாகக் கிரயமாக ஐசீஎஸ்ஐடீ இற்கும் முறையேரூபா 378,676,095 மற்றும் ரூபா 25,617,480 ஆன தொகைகளை மீளாய்வாண்டில் சீபீஎஸ்எல் செலுத்தியிருந்தது.

ரூபா 417,372,909 கூட்டுத்தொகையான மேற்படி கொடுப்பனவுகள் மீள் நிரப்புதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் இச் செலுத்துகைகள் சீபீஎஸ்எல் இன் தொழிற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

“மேற்படி செலுத்துதகைகள் சீபீஎஸ்எல் இன் தொழிற்பாடுகளிலிருந்து நேரடியாக எழுந்திராத போதிலும், மேற்குறித்த விடயம் தொடர்பில் 2008 திசெம்பர் 16 ஆந் திகதி நாணயச் சபையினால் வழங்கப்பட்ட நெறிப்படுத்தலிற்கு அமைய, டீபீ இற்கு சீபிசீ இனால் பணத்தினை செலுத்தாமை தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகஐசீஎஸ்ஐடீ இல் தொடரப்பட்டிருந்த வழக்கில் சீபீஎஸ்எல் இன் பங்குபற்றுதல் இன்றியமையாததாக காணப்பட்டிருந்தது” என இது தொடர்பில் சீபீஎஸ்எல் இன் உதவி ஆளுனர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஈ) முதலாந்தர வணிகர் ஒருவரின் முறையற்ற செயற்பாடுகளும் நிதிசார் முறைகேடுகளும்

சீபீஎஸ்எல் இன் பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்புப் பிரிவு 2015 மார்ச் 31, 2015 மே 20 மற்றும் 2015 மே 21 ஆகிய திகதிகளில் முதலாந்தர வணிகர் ஒருவரின் இடத்திற்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தது. பரிசோதனை அறிக்கை 2015 செப்தெம்பர் 14 ஆந் திகதி நாணயச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.
மேற்படி பரிசோதனைகளின் போது பின்வரும் விதிகள் இந்த முதலாந்தர வணிகரால் மீறப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(i) **நாளொன்றுக்கிடையிலான திரவத்தன்மை வசதி (ஐஎல்எவ்) பாவனை மீதான லங்கா தீர்வை முறைமையின் வீதகள் 2.1 (2013) ஆம் பாகம்**- ஐஎல்எவ் இனை பெற்றுக்கொள்வதற்காக முதலாந்தர வணிகர் அதன் வாடிக்கையாளர் பிணையங்களை பிணையாக பயன்படுத்தியிருந்தார்.

(ii) **2002 மே 02 ஆந் திகதிய மீள்கொள்வனவு மற்றும் மறு மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் நெறிப்படுத்தல்** - மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வாடிக்கையாளர்களிடமிருந்தான கடன்பெறுவனவுகளிற்கு எதிராக போதியளவு பிணையங்களை ஒதுக்குவதற்கும் மறு மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் கடன் வழங்களிற்காக போதியளவு சந்தைப் பெறுமதியுடன் கூடிய பிணையங்களை பெற்றுக்கொள்வதற்கும் வணிகர் தவறியிருந்தார்.

(iii) **லங்கா தீர்வை முறைமை விதிகள் பாகம் 2.1 இன் 2.2 ஆம் பிரிவு (2013) (வைத்திருத்தல் பொறுப்புக்கள்)**–லங்கா தீர்வை முறைமையின் மத்திய வைப்பு முறைமையிலுள்ள சில வாடிக்கையாளாகளின் நேரடியான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு வணிகர் தவறியிருந்தார்.

2012 திசெம்பர் 10 மற்றும் 2012 திசெம்பர் 14 ஆம் திகதிகளில் முன்னர் மேற்கொண்டிருந்த பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த குறித்த வணிகரின் வரம்பு மீறுதல்கள் தொடர்பில் (சில வாடிக்கையாளர்களிற்கு போதியளவு பிணையங்களை ஒதுக்கியிருக்காமை மற்றும் ஐஎல்எவ் வசதியினை பெற்றுக்கொள்வதற்காக வாடிக்கையாளர் பிணையங்களை பயன்படுத்தியிருந்தமை) 2013 யூன் 06 ஆந் திகதி பல எச்சரிக்கை கடிதங்களையும் நெறிப்படுத்தலையும் சீபீஎஸ்எல் வழங்கியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. முதற்தர வணிகரினால் புரியப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் பல்வேறு சுட்டிக்காட்டுதல்கள் காணப்பட்ட போதிலும், சீபீஎஸ்எல் இனால் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக இதனையொத்த முறையற்ற செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டிலும் இந்த வணிகரினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அத்துடன், இந்த முதலாந்தர வணிகருடன் விற்பனை செய்யத்தக்க மறு மீள்கொள்வனவு முதலீடுகளில் சீபீஎஸ்எல் அதனது நிதிகளை முதலீடு செய்திருந்தது. விற்பனை செய்யத்தக்க கருவிகளுக்காக, அதனைக் கையில் வைத்திருக்கும் நபர் எந்த நேரத்திலும் பிணைகளை பரிமாற்றம் செய்வதற்கான உரித்தினைக் கொண்டுள்ளார். மறு மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் பிரகாரம், குறித்த பிணை மாற்றப்படுகையில் அதனையொத்த அல்லது பிணையின் முதிர்ச்சிப் பெறுமதியிலும் கூடிய பிணையொன்றை வழங்குவதற்கு அதனைவைத்திருப்போன் கடப்பாடுடையவராவார். குறித்த முதற்தர வணிகர் தான் மீளெடுத்திருந்த பிணைகள் தொடர்பில் பிணைகளை மீளப்பொறுப்பாக்குவதற்கு தவறியிருந்ததுடன் மறு மீள்கொள்வனவு உடன்படிக்கை நிபந்தனைகளை மீறியிருந்தார். இருப்பினும், விற்பனை செய்ய முடியாத கருவிகளில் சீபீஎஸ்எல் தனது நிதிகளை முதலீடு செய்திருப்பின், முதலீட்டு உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளிற்கு முரணாக பிணைகளை மாற்றம் செய்வதற்கு பிணைகளை வைத்திருப்போருக்கு முடியாதிருந்திருக்கும். இந்த முதற்தர வணிகரினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீபீஎஸ்எல் இன் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்த மறு மீள்கொள்வனவு முதலீடுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 1.9 பில்லியனாகும். 2015 திசெம்பர் 04 ஆந் திகதி எடுத்திருந்த சபைத் தீர்மானத்திற்கமைய, பிணைகளின்றி மேற்படி முதலீடுகளை பிற்போடுவதற்கு சீபீஎஸ்எல் இன் நாணயச் சபை தீர்மானித்திருந்தது. மீளெடுக்கப்பட்ட பிணையங்கள் தொடர்பில் எவ்வித மீள்மதிப்பிடலுமின்றி குறித்த பிணையங்களை முதலாந்தர வணிகள் மீளெடுத்திருந்தமையால் இந்த முதலீடுகள் தொடர்பில் லங்கா பாதுகாப்பு முறைமை மீதி எதனையும் காண்பித்திருக்கவில்லை.

இந்த முதலாந்தர வணிகருடன் மேற்கொண்டிருந்த ரூபா 2.5 பில்லியன் தொகையான அதனது முதலீடுகளிற்கு பிணையங்களை ஒதுக்கியிராமை தொடர்பில் 2015 ஒக்தோபர் 07 ஆந் திகதி ஒரு அரசாங்க நிறுவனம் சீபீஎஸ்எல் இற்கு அறிவித்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(உ) கடன் அட்டை செலவினத்தை தீர்த்தல்

முற்பணக் கொடுப்பனவுகள் தொடர்பில் சீபீஎஸ்எல் இன் நிதித் திணைக்களத்தினால் 2011 ஏப்ரல் 19 ஆந் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பபிரகாரம், பெறப்பட்ட முற்பணங்களை தீர்ப்பதற்காக மூலக் கிரயப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேற்படி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக சீபீஎஸ்எல் இன் முன்னாள் ஆளுனரினால் 2015 பெப்ரவரி 28 முதல் 2015 திசெம்பர் 31 வரையிலான காலத்தில் கடன் அட்டை மூலம் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,537,355 தொகைக்கான மூலக் கிரயப்பட்டியல்கள் அவரால் எடுக்கப்பட்டிருந்த முற்பணங்களை தீர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2015 பெப்ரவரி 28 முதல் 2015 திசெம்பர் 31 வரையிலான காலத்தில் முன்னாள் ஆளுனரின் உத்தியோகபூர்வ கடன் அட்டை மூலம் செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,564,359 தொகைக்குரிய தனிப்பட்ட செலவினங்களை சீபீஎஸ்எல் செலுத்தியிருந்தது. மேற்படி செலவினங்கள் குறிப்பிடத்தக்க தாமதத்தின் பின்னர் மீளளிக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. விபங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **கடன் அட்டை கூற்றின் காலம்** | **முற்பணம் பெறப்பட்ட/கடன் அட்டை பட்டியல்கள் தீர்க்கப்பட்ட திகதி** | **மீளளிக்கப்பட்ட தொகை**<br>**ரூபா** | **மீளளிக்கப்பட்ட திகதி** | **தாமதிக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 31.03.15 - 30.04.15 | 21.05.15 | 31,166 | 08.06.15 | 18 |
| 30.04.15 - 31.05.15 | 23.06.15 | 42,450 | 10.07.15 | 17 |
| | | 25,511 | 22.09.15 | 91 |
| 31.05.15 - 30.06.15 | 27.07.15 | 38,048 | 18.08.15 | 22 |
| | | 194,660 | 22.09.15 | 57 |
| 30.06.15 - 31.07.15 | 25.08.15 | 775,124 | 22.09.15 | 28 |
| 31.07.15 - 31.08.15 | 22.09.15 | 517,007 | 24.11.15 | 63 |
| 31.08.15 - 30.09.15 | 15.10.15 | 450,000 | 07.12.15 | 53 |
| | | 185,766 | 08.12.15 | 54 |
| | | 1,801,616 | 26.04.16 | 194 |
| 30.09.15 - 31.10.15 | 24.11.15 | 553,934 | 18.01.16 | 55 |
| | | 24,193 | 27.01.16 | 64 |
| | | 14,191 | 29.02.16 | 97 |
| 31.10.15 – 30.11.15 | 15.12.15 | 1,053,993 | 04.03.16 | 80 |
| 30.11.15 - 31.12.15 | 19.01.16 | 856,700 | 04.03.16 | 45 |

## 3.4 இலங்கையின் பொதுப்படுகடனை முகாமைத்துவம் செய்தல்

நாட்டின் பொருளாதார மற்றும் விலை உறுதியினையும் நிதி முறைமையின் உறுதியினையும் உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பொதுப்படுகடன் முகாமைத்துவ முகவர் தொழிற்பாட்டிற்கு சீபீஎஸ்எல் பொறுப்பாகவுள்ளது. அரசாங்கத்திற்கான காசுத் தேவைகளை அரசாங்கத்திற்கு ஆகக்குறைந்த கிரயத்தில் நிறைவேற்றுவதற்காக திறைசேரி பிணைகளை வழங்குவதற்கான தனிப்பட்ட பொறுப்பினை அது கொண்டுள்ளது.

2015 பெப்ரவரி முதல் 2016 மே வரையான காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பிலான விசேட கணக்காய்வு அறிக்கையொன்று 2016 யூன் 29 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ சபாநாயகர் அவர்களிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விசேட கணக்காய்வு அறிக்கையிலுள்ள அவதானிப்புக்கள் இந்த அறிக்கையின் அவதானிப்புக்களாக கருதப்படுதல் வேண்டும்.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் கவனத்திற்கு காலத்திற்கு காலம் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றன.

| பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் கண்காணிப்பு | - முதலாந்தர வணிகர் ஒருவரினால் விதிகள் மீறப்பட்டிருத்தல் |
| (ஆ) செலுத்துகைகள் | - மீள்நிரப்புவதற்கான ஏற்பாடுகளின்றி வெளிநாட்டு சட்டத்தரணிகள் மற்றும் மதியுரைஞர்களிற்கான செலுத்துகைகள் |
| (இ) முற்பணங்களை தீர்த்தல் | - மூல கிரயப்பட்டியல்களின்றி முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருத்தல் |